ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1923/43 - 2015 ජූලි මස 15 වැනි බදාදා - 2015.07.15
*1923/43 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு மற்றும் தனியார் இடுகாடு பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் II ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பொது இடுகாடு மற்றும் தனியார் இடுகாடு பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5 (1) ஆம் பிரிவினால் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி சபை அமைச்சருமான சட்டத்தரணி ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர ஆகிய என்னால், வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கீழ் காணப்படும் அட்டவணை I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள இடுகாட்டில் பிணங்களை புதைத்தல் அல்லது தகனம் செய்வதற்காக பொது இடுகாடாக இத்துடன் அறிவித்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது.*

சட்டத்தரணி ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
முதலமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல், நீதியும் சமாதானமும்,
உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவள, கல்வி மற்றும்
கலாசார நடவடிக்கை, காணிகள், சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை,
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல் மற்றும் விநியோக
அமைச்சரும்,
வடமேல் மாகாணம்.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
*2015, யூலை 15.*

**அட்டவணை 01**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் பிங்கிரிய வருமான பிரிவிற்கு உரிய கட்டுகம்பல ஹத்பத்துவையின் யகம்பத்து கோரளையின் பஹல வீரக்கொடியான என்ற கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே ஜெனரால் அவர்களினால் அமைக்கப்பட்டு அவரது பொறுப்பில் உள்ள இலக்கம் ஐ. 11/32க்கான உரிய துறைக்கான பத்திரத்தில் 2024 கான கடைசி கிராம திட்டத்தின் காணித் துண்டு இலக்கம் : 103 ஆக காட்டப்பட்டுள்ளதும் அளவில் இரண்டு றாட் இருபத்திரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 02றா. 22 பேர்) உள்ளது என்று கணக்குப்பார்க்கப்பட்டுள்ள வடக்கு - ரி. பி. 382197, கிழக்கு - பாதை, தெற்கு - நடைபாதைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு, மேற்கு - ரி. பி. 382117 ஆகிய எல்லைகளைக் கொண்ட மயானம் ; இது அரச காணி.

(இலக்கம்: பி. 3298 இற்கான வரைபடக் குறிப்பு).

**அட்டவணை 02**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் பிங்கிரிய வருமான பிரிவிற்கு உரிய கட்டுகம்பல ஹத்பத்துவையின் யகம்பத்து கோரளையின் கஹலகஸ்வல என்ற கிராமத்தில் அமைந்துள்ள சர்வே ஜெனரால் அவர்களினால் அமைக்கப்பட்ட அவரது பொறுப்பில் உள்ள இலக்கம் ஐ. 12/33 க்கான பத்திர இலக்கம் 2036 இற்கான கடைசி கிராம திட்டத்தின் காணித் துண்டு இலக்கம் : 5 ஆக காட்டப்பட்டுள்ளதும் அளவில் இருபத்திஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27 பேர்) உள்ளது என்று கணக்குப்பார்க்கப்பட்டுள்ள வடக்கு - புதங்கும்புர கிராம எல்லை, கிழக்கு - பாதை, தெற்கு மற்றும் மேற்கு - இலக்கம் 06 இற்கான காணித்துண்டு ஆகிய எல்லைகளைக் கொண்ட மயானம். இது அரச காணி.

(இலக்கம்: பி. 2850 இற்கான வரைபட குறிப்பு).

2. மேற்குறிப்பிடப்பட்ட யகம்பத்து கோரளையின் புதங்கும்புர என்ற கிராமத்தில் அமைந்துள்ள சர்வே ஜெனராலினால் முறைப்படுத்தப்பட்டு அவரது பொறுப்பில் உள்ள இலக்கம் ஐ 12/33 க்கான துறைப் பத்திர இலக்கம் 2035 இற்கான கடைசி கிராம வரைபுத் திட்டத்தின் காணித்துண்டு இலக்கம் 37 ஆக காட்டப்பட்டுள்ளதும் அளவில் றூட் ஒன்றும் பேர்ச்சஸ் மூன்றும் (0ஏ. 1றூ. 3பே.) உள்ளது என்று கணக்குப்பார்த்துள்ள மேற்கும் வடக்கும் : ரி. பி. 374133 ; கிழக்கு : பாதை ; தெற்கு : கஹலகஸ்வல கிராமம் ஆகிய எல்லைகளைக் கொண்ட புதங்கும்புர மயானமாகிய அரச காணி.

(இலக்கம்: பி. 2851 இற்கான வரைபடக் குறிப்பு).

7- 1427

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.